Vol. 9 No. 2

பங்குனி-ஆனி 2052
April - June 2021

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S. Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

***Published by***

**RAJA PUBLICATIONS**

**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**28** பகுதி-6
Part -6

# பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களில் பொதுக்கூற்று வடிவங்கள்

**மு. சரண்யா**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் க. தனலட்சுமி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

**'பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களில் பொதுக்கூற்று வடிவங்கள்'** என்ற தலைப்பிலான இக்கட்டுரையில் பொள்ளாச்சி வட்டார ஊர்களின் பின்னொட்டுக்களின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ளது. ஆறு, ஊர், கல், குளம், குறிச்சி, சேரி, துறை, பட்டி, பட்டிணம் பதி, பாடி, பாளையம், பாறை, புரம், மடை, மலை என்னும் பின்னொட்டுக்களை உடைய ஊர்கள் குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்வதாக அமைகிறது. இயற்கை வளமும் வேளாண்மையும் அதிக முக்கியத்துவம் தரக்கூடிய இவ்வட்டாரத்தில் இயற்கை சார்ந்தும் வேளாண்மை சார்ந்தும் ஆட்சி முறை சார்ந்தும் ஊர்ப்பெயர்கள் அமைகின்றன.

**முன்னுரை**

மனிதனானவன் ஓர் இடத்தை விட்டு மற்றொரு இடத்தை நோக்கிப் பயணிக்கும்பொழுது அவன் தன் கடந்த கால நினைவுகளையும் சேர்த்தே சுமந்து செல்கின்றான். அவ்வண்ணம் தான் வசித்து வந்த பழைய இடத்தை விட்டுப் புதியதோர் இடத்தைத் தேர்வு செய்து வாழத்தொடங்கும் பொழுது தன் நினைவலைகளை ஊரிற்குப் பெயர்களாகச் சூட்ட முற்படுகிறான். ஊர்ப்பெயர்கள் பெரும்பாலும் இயற்கையைச் சார்ந்த வகையிலும் வாணிபத் தொழில் முறைகளைச் சார்ந்த வகையிலும் குடியிருப்புகளைச் சார்ந்த வகையிலும் அமைந்திருக்கின்றன. அவ்வூர்ப்பெயர்களை ஆய்ந்தறிவதென்பது மனிதன் தான் கடந்து வந்த பாதையை உலகிற்குத் தெரியப்படுத்துவதாக அமையக்கூடும். அவ்வகையில் பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களின் பொதுக்கூற்று வடிவங்களை ஆராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**பொள்ளாச்சி - பெயர்க்காரணம்**

"சோழப்பேரரசர்களில் கி.பி 1178 முதல் 1216 வரை செங்கோலோச்சிய மூன்றாம் குலோத்துங்கன் முடித்தலைக் கொண்ட சோழன் என்ற பட்டப்பெயர் கொண்டவன். இவன் ஒருமுறை கொங்குநாட்டின் மீது படையெடுத்ததாக வரலாறு கூறுகிறது. அவ்வமயம் இந்த ஊருக்குத் தன் பெயரை வைத்திருக்கலாம்"[1] என்று பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தல வரலாறு நூல் கூறுகிறது.

இதனாலே **'முடித்தலைகொண்ட சோழநல்லூர்'** என்று அழைக்கப்படுகிறது. பிறகு இவ்வூரில் பொருள் புழக்கம் அதிகமாக இருந்ததால், **'பொருள் ஆட்சி'** எனப்பெயர் உண்டானதாகவும் அதுவே பின்னாளில், **'பொருளாட்சி'** என மருவியதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

பொதுவாக, சோலைக்குப் **'பொழில்'** என்ற பெயருமுண்டு. காலப்போக்கில் அப்பொழில்களுக்கு இடையில் சிற்றூர் உண்டானது. இச்சிற்றூர்களை **'வாய்ச்சி'** என்று அழைப்பது இயல்பு. அவ்வண்ணம் பொழில்களுக்கிடையில் உண்டான இவ்வூரை **'பொழில் வாய்ச்சி'** என்று நம் முன்னோர்கள் அழைத்து வந்துள்ளனர்.

மக்கள் மழை இல்லாத காலத்தில் நீரினை கிணறுகளிலிருந்து இறைத்து விவசாயம்

மேற்கொண்டு வந்துள்ளனர். இதனால் இது **'இறைச்சில் பொழில்வாய்ச்சி'** எனப் பெயர் பெற்றது.

**பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்கள்**

ஊர்ப்பெயர்கள் என்பது பழந்தமிழரின் இருப்பைப் பறைசாற்றக்கூடியது. பெயர்களை வைப்பதில் நம்முன்னோர்கள் ஓர் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இடப்பெயர்கள் எல்லாம் மனிதனின் நிகரற்ற மொழித்திறனையும் தனித்ததொரு பண்பாட்டையும் எடுத்துரைத்து நிற்கின்றன.

**"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"**[2]

என்னும் தொல்காப்பியரின் கூற்றிற்கிணங்க ஊர்ப்பெயர்களும் ஏதோ ஒரு பொருளினைப் தனக்குள்ளே பொதிந்து வைத்துக்கொண்டுதான் உள்ளன.

பொள்ளாச்சி வட்டாரத்தில் பரவலாக இருக்கும் ஊர்ப்பெயர்களானது மலை, பாறை, கல், குறிஞ்சி, குறிச்சி, கடவு, கோடு, பாடி, பட்டி, புதூர், சேரி, ஊர், பட்டினம் (பட்டணம்), பதி, புரம், துறை, மடை, குளம், பாளையம், மரம், மேடு, வலசு, ஆறு என மக்கள் வாழும் வாழ்விடங்களையும் இயற்கை ஆதாரங்களையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனக்குள் வைத்திருக்கின்றன.

**ஆறு**

முன்பு ஆற்றங்கரைகளிலே சிறந்த ஊர்கள் தோன்றின. அதனாலே **'ஆறில்லா ஊருக்கு அழகில்லை'** என்ற முதுமொழியும் எழுந்தது. எனவே பண்டைய தமிழகத்தில் வேளாண்மைக்கும் வாணிப வளத்துக்கும் ஆறுகளே சிறந்ததொரு கருவியாகப் பயன்பட்டது. **'ஆழியாறு'** (Azhiyar) என்ற ஆறானது கேரளா மாநிலத்தில் ஓடும் கண்ணாடிப்புழா ஆற்றின் துணை ஆறு ஆகும். கண்ணாடிப்புழா ஆறானது, கேரளத்தின் இரண்டாவது மிக நீளமான பாரதப்புழா ஆற்றின் துணையாறாகும். தமிழ்நாடு, பொள்ளாச்சிக்கு அருகேயுள்ள ஆழியாறு அணையிலிருந்து இந்த ஆறு துவங்குகிறது.

ஆழியாறு அணை (Aliyar Reservoir) தமிழ்நாடு கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி அருகே அமைந்துள்ள சிறு நீர்த்தேக்கமாகும். ஆழி என்பதற்கு **'கடல்'** என்றொரு பொருள் உண்டு. ஆகவே, இது கடல்போன்ற ஆறு என்று குறித்து நின்றது. அதனாலே இதற்கு ஆழியாறு என்று பெயர். இந்திய தர நிர்ணய அமைவன பட்டியலில் இவ்வணையானது பெரிய அணைகளின் தொகுப்பின் கீழ் உள்ளது.

இதைப்போல் திருநள்ளாறு, பழையாறு, கோட்டாறு, திருவையாறு, மணிமுத்தாறு, கயத்தாறு, செய்யாறு என்னும் பல ஊர்களும் ஆறு என்பதைப் பின்னொட்டாகக் கொண்டுள்ளன.

**ஊர்**

பண்டைய மக்கள் நானிலங்களிலும் வாழ்ந்தவராயினும் அவர்தம் குடியிருப்புக்கு ஏற்றதாக அமைந்திருந்தது மருத நிலமே. ஆதலால் பெரும்பாலும் **'ஊர்'** என்பது மருத நிலத்தைக் குறித்து நிற்கும். இதைக் கருத்தில் கொண்டு நோக்குவோமேயானால் தமிழகம் முழுமையிலும் ஊர் என்னும் பின்னொட்டு அமையப்பெற்றிருக்கும்.

உதாரணமாக மண்ணூர், முத்தூர், நல்லூர், திவான்சாபுதூர், தென்சித்தூர், ஓரக்கலியூர், தாத்தூர், குளத்தூர், பெத்தநாயக்கனூர், மரம்புடுங்கிக்கவுண்டனூர், பழனிக்கவுண்டன்புதூர், காளியப்பக்கவுண்டன்புதூர், வாழக்கொம்பு நாகூர், வேடசெந்தூர் ஆகிய ஊர்களைக் குறிப்பிடலாம்.

**கல்**

**'கல்'** என்ற பெயர் இடையிட்டு அமைந்துள்ள ஊர்களாக நாட்டுக்கல்பாளையம், நரிக்கல்பதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நாட்டுக்கல் பாளையம் என்பது இறந்துபோன வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபட்ட ஊரே ஆகும். நடுகல்லே பிற்காலத்தில் நாட்டப்பட்ட கல் என்ற பொருளில் அமைந்து நாட்டுக்கல் ஆயிற்று.

இதைப்போன்றே சூலக்கல், திண்டுக்கல், நாமக்கல், ஒகேனக்கல் ஆகியனவும் குறிப்பிடத்தக்கது.

**குளம்**

குளம் என முடியும் ஊர்ப்பெயர்களானது தமிழகம் முழுவதிலும் காணப்படும். ஏரிக்கு அடுத்தபடியாக வேளாண்மைக்குப் பெரிதும் உதவக்கூடியது குளமாகும். ஆனைமலையை ஒட்டி ஓடையகுளம் என்றோர் ஊர் உள்ளது. இது முதலில் குளத்தை உடைய ஊர் என்றிருந்து பிறகு ஓடையகுளம் என்று மருவியது. இது அன்று அந்தக் குளத்தின் தன்மையைப் பொருத்து பெயர் பெற்றிருக்கக்கூடும். உதாரணமாக பாப்பன்குளம், தாமரைக்குளம் கூறலாம்.

**குறிச்சி**

மலை அடிவாரத்தில் உள்ள ஊர்களுக்கு குறிச்சி என்ற பெயர் உண்டு. முன்னாளில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறவர் என்று பெயர் பெற்றனர். அன்னார் குடியிருந்த இடம் குறிச்சி என்று குறிக்கப்பட்டது. பொள்ளாச்சியிலிருந்து ஆழியாறு செல்லும் வழியில் பல இனமக்களும் வாழும் ஊராக அங்கலக்குறிச்சி என்ற ஊர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

குறிச்சி என்னும் சொல்லைக்கொண்டு முடியும் ஊர்களுக்கு உதாரணமாக குறிச்சி (கோவை, கர்நாடகா, கோட்டயம்), ஆழ்வார் குறிச்சி, பாஞ்சாலங்குறிச்சி, விளாங்குறிச்சி, கள்ளக்குறிச்சி, அரவக்குறிச்சி, போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**சேரி**

சேரி என்பது அன்பின் ஐந்திணைகளுள் ஒன்றான முல்லை நிலத்தின் ஊரினைக் குறிக்க வழங்கப்பட்ட பெயராகும். "இது மக்கள் சேர்ந்து வாழுமிடமாதலால் அது **'சேரி'** என்ற காரணப்பெயராக வழங்கி வந்தது. இச்சொல் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் பெரும்பான்மையாகப் பயின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. முல்லை நிலத்து ஊர்கள் 'சேரி' எனப்பட்டன என்கிறார் நச்சினார்க்கினியர்"[3]

பொள்ளாச்சி வட்டாரத்தில் குறிஞ்சேரி என்ற ஊர் காணப்படுகிறது. இவற்றைப்போன்று புதுச்சேரி, காரச்சேரி, வேளச்சேரி, கொக்கஞ்சேரி, பாண்டிச்சேரி, கூடுவாஞ்சேரி, செதம்பச்சேரி (சுல்தான்பேட்டை) ஆகிய ஊர்ப்பெயர்களும் சேரி என்பதைப் பின்னொட்டாக சில ஊர்ப்பெயர்கள் கொண்டிருக்கின்றன.

சேரி எனப்படுவது புறத்தே உள்ள குடியிருப்புகளையும் சுட்டி வழங்கியிருக்கின்றது. பார்ப்பனச் சேரி, இடையச்சேரி என்பதைப்போல மக்கட் பிரிவினரின் பெயர்களுடனும் சேர்ந்து சங்க இலக்கியத்திலும் வழங்கி வருகின்றது.

இன்று 'சேரி' எனப்படுவது பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்கள் வாழும் ஊர் அல்லது ஊரின் பகுதியாகப் பெரும்பாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**துறை**

ஆறுகளில் மக்கள் இறங்கி நீராடுவதற்கேற்ற இடம் **'துறை'** எனப்படும். தமிழகத்திலும் கூட ஆற்றை அடுத்துள்ள ஊர்கள் யாவும் பெரும்பாலும் துறை என்னும் பின்னொட்டினைத் தாங்கி நிற்பதை இன்றும் காண முடிகின்றது. சில துறைகளின் இயற்கை அழகு அவற்றின் பெயரால் அழைக்கப்படும். மயில்கள் ஆடும் துறை **'மயிலாடுதுறை'** எனப்பெயர் பெற்றது.

அதேபோல் சோமன்துறை, குரங்காடுதுறை, ஆடுதுறை, கடம்பந்துறை, மாந்துறை, பூந்துறை, குறுக்குதுறை, ஆலந்துறை, திருப்பாலைத்துறை, மயிலாடுதுறை என்னும் பல ஊர்கள் உள்ளன.

**பட்டி**

**'பட்டி'** என்பது முற்றிலும் முல்லை நிலத்து ஊர்களைக் குறிக்கும் சொல்லாகும். தமிழகத்தில் பெரும்பாலும் இவ்வகையான ஊர்கள் பாண்டிய நாட்டில் தான் அதிகமாக உள்ளது. பட்டி என்னும் சொல்லுக்கு தொழுவம், ஆட்டுக்கிடை, பசுக்கொட்டில் எனப் பொருள்கள் உண்டு முல்லை நிலத்து மக்கள் ஆயர், ஆய்ச்சியர் ஆவர் அவர்களது தொழில் ஆநிரைகளை மேய்ப்பது அதனாலே இப்பெயர் தோன்றிற்று.

பட்டி என்பதற்கு, மெய்யப்பன் தமிழ் அகராதியானது, 'பசுக்கொட்டில், ஆட்டுக்கிடை, நிலவளவு வகை, சிற்றூர்'[4] என்று விளக்கம் அளிக்கிறது.

எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் 'பட்டி' என்பதற்குப் பின்வரும் விளக்கத்தை நல்குகின்றார். "பட்டை என்றால் மூங்கில் அல்லது கமுகில் இருந்து கீறிப் பிரித்து எடுக்கும் குச்சி. பட்டைகளால் ஆனது பட்டி. அது இடைவெளியே இல்லாமல் முடையப்பட்டிருந்தால் அது தட்டி. வலைபோலிருந்தால் பட்டி. பட்டி போடுவது என்றால் அந்த மூங்கில் முடைவுகளை அடுக்கி ஒரு வட்டாரத்தை உருவாக்கி அதற்குள் ஆடுகளையோ வாத்துகளையோ அடைப்பது"[5]

பொள்ளாச்சிப் பகுதியில் மட்டும் ஏரிப்பட்டி, பூசாரிப்பட்டி, கஞ்சம்பட்டி, புளியம்பட்டி, ஊஞ்சவேலாம்பட்டி, மாக்கினாம்பட்டி, சீலக்காம் பட்டி, திப்பம்பட்டி, கோலார்பட்டி, ஆச்சிப்பட்டி, சூளேஸ்வரன்பட்டி, கோட்டாம்பட்டி, கம்பாலபட்டி, சூலநாயக்கன்பட்டி, வீரல்பட்டி, ஆவலப்பம்பட்டி, கொல்லப்பட்டி, கள்ளிப்பட்டி, மாமரத்துப்பட்டி, கோடங்கிபட்டி, ஜல்லிபட்டி என இருபதுக்கும் மேற்பட்ட ஊர்ப்பெயர்கள் காணக்கிடைக்கின்றன.

### பட்டினம்

பட்டினம் என்பது துறைமுகத்தைச் சேர்ந்த ஊர்களைக் குறிக்கும். ஏற்கனவே கூறி உள்ளதைப் போன்று மனிதனின் ஆசை சில ஊர்களுக்கு பட்டினம் எனப்பெயரிட்டு 'தேவிபட்டினம்' எனப் பெயரிடப்பட்டது. பட்டி என்றால் கால்நடைகள் அடைகின்ற இடம் என்று பொருள். கால்நடை வளம் மிக்க பகுதி என்ற பொருளில் பட்டினம் எனப் பெயரிட்டமை என்றாலும் அது சாலப் பொருந்தும்.

பட்டினம் என்பது கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள நகரங்களைக் குறிக்கும். இது நெய்தல் நிலம் தொடர்புடைய பண்டைய சொல்.

நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார்பட்டினம், முசிறிப்பட்டினம், மதராசபட்டினம் அனைத்தும் பண்டைய புகழ்பெற்ற நகரங்களாம்.

"நெய்தல் நிலத்து ஊர்கள் 'பட்டினம்' எனப்படுமென்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் இவ்வரையறை சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் தெளிவாக உருப்பெறவில்லை என்கிறார் கி.நாச்சிமுத்து கூறுகிறார். இவ்வடிவமே காலப்போக்கில் பட்டணம் என்று சொல் நிலையிலும், பொருள் நிலையிலும் மாறியிருக்கிறது. ஊர்களைக் குறிப்பிடும் பொதுக்கூறாகப் பிற்காலப் பாண்டியர் காலத்தில், 'பட்டணம்' பயன்பட்டிருக்கிறது"[6]

### பதி

மக்கள் வாழ்விடம், உறைவிடம் 'பதி' எனப்பட்டது. சமணர்கள் வாழ்ந்த இடமாதலால் அது பதி எனவும் அழைக்கப்பட்டது.

"பதி எழு அறியாப் பழங்குடி"[7]

என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பதிவு செய்கின்றார். உதாரணமாக செமனாம் பதி, நரிக்கல்பதி, பாலாறுபதிஎன்ற ஊர்களைச் சுட்டலாம்.

### பாடி

'பாடி' என்பது முல்லை நிலத்து ஊர்களைக் குறிக்கப் பயன்படும் சொல். ஊர்களைக் குறிப்பிட வழங்கிவரும் தொன்மையான வடிவங்களுள் ஒன்று பாடி என்பதாகும். இது சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறுகையில் முல்லை நிலத்து ஊர்கள் 'பாடி' எனப்பட்டன.

பொள்ளாச்சி வட்டாரத்தில் 'தேவம்பாடி வலசு', 'முள்ளுப்பாடி' ஆகிய ஊர்ப்பெயர்கள் பாடி என்ற சொல்லில் முடிவடைவதாக உள்ளது.

ஆகவே, தொல்தமிழரின் முல்லைத்திணைக்குரிய மரபு வழிப்பட்ட ஊர்ப்பெயர்கள் இன்றும் பொள்ளாச்சி வட்டாரத்தில் வழக்கிலிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது.

இவைபோன்றே குறிஞ்சிப்பாடி, தாளிப்பாடி, வாணியப்பாடி, கவுந்தப்பாடி (கோவிந்தபாடி), தாங்கப்பாடி, வாணியப்பாடி, வியாசர்பாடி என்ற ஊர்ப்பெயர்களும் 'பாடி' என்னும் சொல்லாட்சியைக் கொண்டு முடிவனவாக உள்ளன.

### பாளையம்

படைவீரருக்குரிய ஊர் பாளையம் எனப்படுகிறது. தமிழகமெங்கும் பாளையம் என்னும் ஊர் பரவலாகக் காணப்படினும் கொங்கு நாடே பாளையத்திற்குப் பெயர் பெற்ற ஊராகும். அதிலும் பொள்ளாச்சி வட்டாரத்தில் பாளையம் என்னும் ஊர்ப்பெயரைக் கொண்டு முடியும் ஊர்கள் ஏராளம்.

"பேட்டை, பாளையம், புரம் என்ற பின்னொட்டு உடைய ஊர்ப்பெயர்கள் சோழர் காலத்தில் வழங்கத் தொடங்கி, நாயக்கர் காலத்தில் பல்கிப்பெருகின. சங்க காலத்தில் மக்கள் சேர்ந்திருந்த இடத்திற்கு எப்படி சேரி என அழைக்கப்பட்டதோ அதைப்போல, நாயக்கர் காலத்தில் மக்கள் கூடியிருந்த இடத்திற்கு பாளையம் என அழைக்கப்பட்டது"[8] என்று ந.இராஜேந்திரன் அவர்கள் பதிவு செய்கின்றார்.

பாளையக்காரர்கள் ஆட்சி புரிந்ததால் அவ்வூர் 'பாளையம்' என்னும் பின்னொட்டினைத் தாங்கி நிற்கின்றன.

உதாரணமாக, நாட்டுக்கல்பாளையம், பக்கோதிபாளையம், நாயக்கன் பாளையம், ஆவல் சின்னாம்பாளையம், பில்சின்னாம்பாளையம், அர்த்தநாரி பாளையம், கரையாம்பாளையம், கரட்டுப்பாளையம், தென்சங்கம்பாளையம், கரட்டுப்பாளையம், நல்லாம்பாளையம், கெங்கம்பாளையம், சின்னப்பம்பாளையம், அம்பராம்பாளையம், போடிபாளையம், ராசிசெட்டிபாளையம், ஐயம்பாளையம், காளிபாளையம், நல்லிக்கவுண்டன்பாளையம், நாட்டுக்கல்பாளையம், பக்கோதிபாளையம், கொள்ளுப்பாளையம், தேவனாம்பாளையம், செட்டிபாளையம், தென்குமாரபாளையம், சங்கம்பாளையம், சந்தேகவுண்டன்பாளையம், கோவில்பாளையம், காளியாலம்பாளையம், குரும்பபாளையம், இராசக்கா பாளையம் என முப்பதுக்கும் மேற்பட்ட ஊர்ப்பெயர்களை பொள்ளாச்சி கொண்டுள்ளது.

### பாறை

மலையை ஒட்டிய பெருங்கற்கள் இருக்கும் பகுதியை பாறை என்று கூறுவர். பொள்ளாச்சியிலிருந்து பொன்னாலம்மன்துறை செல்லும் வழியில் தேங்காய்ப்பாறைக்களம் என்ற ஊர் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாறை என்பதற்கு க்ரியாவின் தற்கால தமிழ் அகராதியானது, 'பெரும்பரப்புடைய ஒரே கல், பாறாங்கல்'[9] என்றும் மெய்யப்பன் தமிழ் அகராதியானது, 'பூமியிலுள்ள கருங்கல் திரள், சிறுதிட்டை'[10] என்றும் விளக்கம் தருகின்றது.

உதாரணமாக வால்பாறை, காடம்பாறை, மணப்பாறை, வரட்டுப்பாறை, பூம்பாறை (கொடைக்கானல்) போன்ற இடங்களைச் சுட்டலாம்.

### புரம்

குடியிருப்பினைக் குறித்து வரும் சொல் 'புரம்' ஆகும். மேலும் இது சிறந்த ஊர்களைக் குறிக்கும் சொல்லாகும். புரம் என்பது புரி எனவும் வழங்கும். நாட்டின் தலைநகர் புரம் எனப்பட்டதாகச் சூடாமணி நிகண்டு கூறுகின்றது.

சிலப்பதிகாரம் 'சிங்கபுரம்', 'கபிலபுரம்' என்ற இரண்டு ஊர்களைச் சுட்டுகிறது.

இவை பிற நாட்டு நகரங்களாகும். தமிழ்நாட்டில் 'புரம்' என்ற பெயரில் நகரங்கள் எதுவும் அக்காலத்தில் காணப்படவில்லை. இடைக்காலத்தில் புரம் எனும் பெயரில் ஊர்கள் இருந்துள்ளன. இவை வணிகர்களின் குடியிருப்புகளைக் குறித்து அமைந்துள்ளன.

சந்திராபுரம், ராமச்சந்திராபுரம், கோபாலபுரம், காளியாபுரம், பொன்னாபுரம், மீனாட்சிபுரம், சண்முகபுரம், வஞ்சியாபுரம், மோதிராபுரம், அமணலிங்கபுரம், மயிலாபுரம் என பத்திற்கும் மேற்பட்ட ஊர்ப்பெயர்கள் காணக்கிடைக்கின்றன.

மடை

அதிக நீரை வெளியேற்றும் வாய்க்கால் 'மதகு' என்றும், 'மறுகால்' என்றும் வழங்கப்பட்டது. நீர்நிலையில் அதிகப்படியான நீர் வெளியேறுவதை 'மறுகால் பாய்தல்' என்பர். இந்த மதகுகள் 'மடை' என்றும் பெயர் பெற்றன. அம்மடைகளைச் சார்ந்த ஊர்ப்பெயர்கள் இன்றும் காணப்படுகின்றன.

இயற்கை எழில் கொஞ்சும் சேத்துமடை கிராமமானது கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் அமைந்துள்ளது. பொள்ளாச்சியில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

அன்று முதல் இன்று வரை தமிழ் சினிமாவில் வெற்றியடைந்த பல திரைப்படங்கள் மற்றும் பாடல்கள் படமாக்கப்பட்ட இடம் சேத்துமடை ஆகும்.

பத்தமடை, பத்தல்மடை, மேலமடை என்ற ஊர்களும் உதாரணமாகச் சொல்லலாம்.

மலை

பொள்ளாச்சி வட்டத்தில் மலை என்று முடியும் ஊர்களில் முக்கியமானது ஆனைமலையாகும். மேற்குத்தொடர்ச்சி மலையில் தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கு இடையில் பரவியுள்ள மலைத்தொடராகும். இதுவும் நீல மலைத்தொடரும் இணைந்த பகுதியில் தான் மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் இணைகின்றன.

பொள்ளாச்சியிலிருந்து சேத்துமடை செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. யானைகள் அதிகமாக உள்ள மலையை ஒட்டியுள்ள ஊர் என்பதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

இதைப்போன்றே மலையை கொண்டு முடியும் ஊர்களுக்கு உதாரணமாக திருவண்ணாமலை, கொல்லிமலை திரிகோணமலை (ஈழம்), கழுகுமலை, வெள்ளிங்கிரி மலை, குடுமியான் மலை, என சில பெயர்களை குறிப்பிடலாம்.

தொகுப்புரை

- ✓ பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்கின்ற பொழுது நீராதாரங்களை அடிப்படையாகக் கொண்ட பின்னொட்டுக்கள் அதிகம் காணப்படுகின்றன
- ✓ பாளையக்காரர்கள் ஆட்சி செய்த காரணத்தினால் பாளையம் என்று முடியக்கூடிய ஊர்கள் அதிகம் தென்படுகின்றன
- ✓ விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து கால்நடைகள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால் பட்டி என்று முடியக்கூடிய ஊர்கள் அதிகம் காணப்படுகின்றன
- ✓ இன அடிப்படையில் ஊர்களின் பெயர்கள் கவுண்டனூர், நாயக்கனூர் என்று முடிவதைப் பார்க்க முடிகின்றது.
- ✓ பாளையம், பட்டி என்ற பின்னொட்டுக்களைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் அதிகம் இருப்பதைப் போலவே, புரம், ஊர் என்னும் பின்னொட்டுக்களைக் கொண்ட ஊர்ப் பெயர்களும் அதிகம் காணப்படுகின்றன.

முடிவுரை

மேற்கண்ட ஆய்வின்வழி பொள்ளாச்சி வட்டாரத்தில் காணப்படும் ஊர்ப்பெயர்களானது இயற்கை அமைப்பைச் சார்ந்தோ மக்களின் தொழில் முறைகளைச் சார்ந்தோ, குடியிருப்புப் பகுதிகளைச் சார்ந்தோ, ஆட்சி முறைகளைச் சார்ந்தோ அமையப்பெற்றிருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் இவ்வூர்ப்பெயர்களானது நம் முன்னோர்களின் வாழ்வுடன் ஏதேனும் ஒரு வகையில் பின்னிப் பிணைந்திருப்பதை உறுதி செய்கின்றன.

அடிக்குறிப்பு

1. பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தல வரலாறு, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கல்வி அறக்கட்டளை, ப.3 என்.வி. பப்ளிகேஷன்ஸ், என்.வி பாலிடெக்னிக் கல்லூரி.

2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, நூ.157, ஒன்பதாம் பதிப்பு ஜனவரி 2012, சாரதா பதிப்பகம், சென்னை - 600014.

3. https://ta.wikipedia.org

4. மெய்யப்பன் தமிழ் அகராதி, ச.வே.சுப்பிரமணியன், ப.773 முதல் பதிப்பு ஜீலை 2009, மணிவாசகா பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108.

5. https://www.jeyamohan.in

6. கி.நாச்சிமுத்து, சங்ககால ஊர்ப்பெயர்கள், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற இரண்டாம் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை, https://ta.wikipedia.org

7. சிலப்பதிகாரம், புலியூர்கேசிகன், மங்கல வாழ்த்துப்பாடல் காதை, அடி.15, மூன்றாம் பதிப்பு - 2014, பாரிநிலையம், சென்னை - 600108.

8. ந.இராஜேந்திரன், திறனாய்வு நோக்கில் க.ப.அறவாணனின் தமிழ் மக்கள் வரலாறு - நாயக்கர் காலம்,ப.8, https://www.researchgate.net

9. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ராமகிருஷ்ணன், ப.717, மூன்றாம் பதிப்பு - நவம்பர் 2020, க்ரியா வெளியீடு, சென்னை - 600017.

10. மெய்யப்பன் தமிழ் அகராதி, ச.வே.சுப்பிரமணியன், ப.828, முதல் பதிப்பு ஜீலை 2009, மணிவாசகா பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108.

௸